உ

சிவமயம்.

துறவி

1954 மலர் 1	திங்கள் வெளியீடு	ஜனவரி இதழ் 6,

துறவி

தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கம்,

திருவண்ணாமலை.

"பற்றுக பற்றற்ருன் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விட்ற்கு"

பதிப்பாளர் .

சுவாமி. ஞானாநந்தா

சின்னமட்டம், எறும்பூர்.

வளையமாதேவி P. O. சிதம்பரம் தாலுக்கா.

வருட சந்தா ரூ. 2—0—0

பொங்கல் நாளே—புனித நன்னாள்.

சூரியன் தென்றிசையினின்று வடதிசைக் கேகும் நாள் உத்தராயண புண்ணிய நாள் என்று மக்கள் மகிழ்வுடன் கூறுவார்கள். இந்நாள் மரம் செடி கொடிகள் இலைகள் உதிர்ந்து பச்சிளம் கொழுந்தினைத் தோற்றுவித்து பூவும், காயும், கனியும் தரும் நாள். செந்நெல்லும், கரும்பும், இஞ்சியும், மஞ்சளும் இல்லம் நோக்கி வரும் நாள். மழை, மிகுகுளிர், நீங்கும் நாள். கவலை தீர்க்கும் கண்ணிய நாள். கவிஞர்கள் போற்றும் கவின் பெறு நாள். விவசாயிகள் கொண்டாடும் வெற்றி நாள். தொழிலாளர் நோன்மை நாள். பொங்கலோ பொங்கல் என்று மக்கள் மகிழ்ச்சி பொங்கும் இந் நன்னாளிலே "துறவி"ப் பத்திரிகை தங்கள் கரத்தில் மகிழ்ச்சி பொங்க வருகின்றது. வரவேற்று அன்புடன் ஆதரிப்பீர்களென்று நம்புகின்றேன். குக. சதாசிவ அடிகள்.

பொருளடக்கம்.

கௌரவ ஆசிரியர் :

குக. சதாசிவ அடிகள்,

திருவள்ளுவரில்லம், எடையூர் P. O.

திருத்துறைப்பூண்டி தாலுக்கா,

தஞ்சை ஜில்லா.

சமயச் சொற்பொழிவுக்கு அழைக்க விரும்புபவர்கள் மேற்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

சிவமயம்.

கடவுள் வாழ்த்து.

"விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்கா ணம்மானாய்."

"தூயதமிழ் நாட்டுத் துறவிகள் சங்கமென்றும்
ஞாயிறுபோன் மக்களுக்கு நன்மைசெயத்—தாயாகும்
உண்ணா முலையாம் உமைசே ரொளிப்பிழம்பாம்
அண்ணா மலைதுணையா மால்."

"அந்தண ரென்னும் அறவோர் அநுபவத்தை
இந்த வுலகோர்க் கெடுத்துரைக்க—வந்த
துறவி வெளியிடுந் தூயதமிழ் நாடுந்
துறவறமும் வாழியமா தோ."

உ

ஓம்

"துறவி"

தீக்ஷை.

பதிப்பாளர், சுவாமி. ஞானனந்தா.

(முன் தொடர்ச்சி)

கிரியையாளன் யோகம் செய்தற்கும் உரியவனுகின்றுன். யோகத்தினுல் அவன் தனது மனதை உலக விடயங்களில் செல்லாதபடி நிறுத்தி சிவபெருமானைத் தியானித்து, தியானத்தின் பயனுக்த் தியானிப்போனுகிய தானும் தியானமும் தோன்ருது, தியானப் பொருளாகிய சிவம் ஒன்றே விளங்கப் பெறுகின்ருன். தியானம் (Contemplation)என்பது, தியானிக்கும் பொருளேயே மனதில் அமைத்து நிறுத்தி அதனுலே சிவனென்றுந் தோன்ருமல் விழுங்கப்பட்டு அதன் மயமாய்ப் போதல். தியானம் அன்றி யோகத்திற்குப் பிராணுயாமமும் தாரணையும் முக்கிய உறுப்புக்களாம். பிராணுயாமம் என்பது பிராண வாயுவை அடக்குதல். தாரணை (Concentration) என்பது மனதை வெளி விடயங்களில் செல்லாத வண்ணம் தடுத்து தியானப்பொருளில் நிறுத்துதல். அவன் பிராணுயாமம், தாரணை தியானம் மூன்றினுலும் மூலாதாரத்திலிருந்து எழுகின்ற இடைகலை, பிங்கலை, என்னும் இரு பக்க நாடிகளை அடைத்து சுழுமுனையாகிய நடு நாடியைத் திறந்து பிராணவாயுவை அதன் வழியாய்ப் பிரமரந்தரம்வரை செலுத்தி, சந்திர மண்டலத்திலுள்ள அமிர்தத்தைச் சுழுமுனை நாடி வழியாய்ப் புருவம் நடுவிலும்; அதற்குக் கீழும் ஒழுகும்படி செய்து சுழுமுனை நாடியிலிருந்து பிரிகின்ற பல நாடித் துவாரங்களின் வழியாய் உடல் முழுவதும் தேக்கி அந்த அமிர்தத்தையுண்டு இன்பம் அடைகின்ருன்.

மேலே சொன்ன சரியை கிரியை யோக நெறிகள் மூன்றும் நான்காவது நெறியாகிய ஞானத்துக்கு உறுப்புக்களாயுள்ளன. சரியை கிரியை யோகங்கள் முறைமையினுலன்றி ஒருவனுக்கு

உண்மை ஞானம் வராது. இவ்வாறு அடைகிற உண்மை ஞானத்தினாலன்றி வீடடைதல் முடியாது. இந்தச் சரியை கிரியை யோக நெறிகளில் ஒருவன் ஞான நூல்களை ஓதியும், ஓதுவித்தும், கேட்டும், கேட்பித்தும், சிந்தித்தும், பதி பசு பாசப் பொருள்களின் இலக்கணங்களையும் பசுவுக்குப் பதியை யடையும் உரிமையையும், பாசத்தை நீக்கும் முறைமையினையும், பதி பசுவுக்கு இடையீடின்றிச் செய்துவரும் உபகாரங்களையும், பதிக்கும் பசுவுக்குமுள்ள ஆண்டானடிமைத் தொடர்பினையும், பிற சித்தாந்த உண்மைகளையும் அறிகின்றான். சமய ஞானத்தினாலும் ஒழுக்கத்தினாலும் அவனிடம் அருட்சத்தி பதிந்து சத்திநிபாதம் பெறுகின்றான். அவன் சரியையில் மந்ததர சத்திநி பாதத்தையும், கிரியையில் மந்த சத்திநி பாதத்தையும், யோகத்தில் தீவிர சத்திநி பாதத்தையும் அடைகின்றான். சத்தி பதிந்த அளவு அவனிடமிருந்த மல வலியும் அவனை விட்டு நீங்குகின்றது.

இந்தப் பருவம் அவன் அடைந்தபொழுது சிவபெருமானே ஒரு மானிட குருவாய் வந்து அவனுக்கு நிருவாண தீக்கை செய்து ஞானநூற் பொருள்களை ஐயந் திரிபற வுணர்த்துகின்றார். நிருவாணம் என்பது உடையின்மை. அதாவது ஆறு அத்துவாக்களையுங் கடந்த தன்மை. குருவானவர் மாணாக்கனுடைய ஆறு அத்துவாக்களையும் சோதித்து பந்தம் நீக்கி அவனுடைய ஆன்மாவைத் திருவடியிலே கூட்டுவிக்கும் தீக்கையாதலால் நிருவாண தீக்கையெனப் பெயர் பெற்றது. இந்தத் தீக்கையில் அவனுக்குக் குரு அத்துவ சுத்தி செய்கின்றார். அத்துவ சுத்தியாவது குருவானவர் மாணாக்கனுடைய ஆறு அத்துவாக்களையுஞ் சோதனை செய்து அவைகளிலே கட்டுண்டு கிடக்கிற சஞ்சித வினைகளையெல்லாம் தமது ஞானத்தால் அறிந்து அவைகளை ஒரே காலத்தில் நெருப்புமுன் பஞ்சுபோல ஞான பாவனையால் கெட்டுப்போம்படிச் செய்தல். குருவினிடம் கேட்டுணர்ந்த உண்மை ஞானத்தினால் மாணாக்கனுக்கு விருப்பு வெறுப்பு இன்மையால் ஆகாமிய வினை ஏறுவதில்லை. பிராரத்த வினையானது உடலூழாயிருந்து உடலுடன் கழியும்.

நிருவாண தீக்கை சத்தியோ நிருவாண தீக்கையெனவும், அசத்தியோ நிருவாண தீக்கை எனவும் இரு வகைப்படும். சத்தியோ நிருவாண தீக்கை பெற்றோர் தீக்கையைப் பெற்ற

பொழுதே உடலினின்று நீங்கி விட்டினைப் பெறுவர். அசத்தியோ நிருவாண தீக்கை பெற்ருேர், தீக்கையிற் சஞ்சித வினையும் ஆகாமிய வினையும் ஞான குருவினுற் சோதிக்கப் பெற்று உடல் நிற்பதற் கேதுவாய் அனுபவிக்கப்படும் பிராரத்த கன்மம் சோதிக்கப்படாமையால் ஆயுள் முடிவில் விட்டினைப் பெறுவர்.

நிருவாண தீக்கை செய்யப்பெற்றவன் ஞான குருவினிடம் ஞானநூற் பொருள்களைக் கேட்கவும், கேட்டலாகிய உண்மை ஞானத்தினுல் அவனது உள்ளத்திலே முதல்வனுகிய பதியும், அப் பதியினுள்ளே பசுவும், அப் பசுவினுள்ளே பாசமும் நிருவி கற்பமாய் அநுபவத்தில் விளங்கித் தோன்றும். பதியானவன் ஆன்மாவின் உடலில் உயிர்க்குயிராய் நிற்கின்ற நிலையும், உலகில் யாண்டும் நிறைந்து நிற்கின்ற பரிபூரண நிலையும் அவ னுக்கு நிருவிகற்பமாய் விளங்கித் தோன்றும்.

மாணுக்கன் ஞான குருவினிடம் கேட்ட ஞானநூற்பொருள் களைக் கருத்தொருங்கித் தனது சிந்தையிற் சிந்திக்கின்ருன். இங்கே சிந்தித்தல் என்பது கேட்ட ஞான உண்மைகளை யோகக் காட்சியினுல் உள்ளுணர்வு அநுபூதியிற் காண்டல் நிருவாண தீக்கைப் பேற்றிற்கு முன் அவன் தனது சிந்தையில் கருத்து மாத்திரம் விளங்கும்படிச் சிந்தித்தல்போல் அல்ல; இந்தச் சிந்தித்தல். இவ்வாறு அவன் எப்பொழுதும் ஞான உண்மைகளைச் சிந்தித்தற்கண் மிக்க வேட்கையுடையவனு யிருத்தலின் ஞான குருவினிடத்திற் கேட்ட உண்மைகள் எல் லாம் அவனுக்குத் தனது அநுபவத்தின் உறைப்பினுலே நிருவிகற்பக் காட்சியைக் கடந்தும் சவிகற்பக் காட்சியை முற்றும் பெருமலும் இரண்டு காட்சிகளுக்கும் இடையிலுள்ள காட்சி நிலையை யடைவன். அவனுக்குக் கேட்டல் அறிவு முறுகி வளர்ந்து, அதனுல் அவன் நான்காவது சத்திநி பாதமாகிய தீவிரதர பக்குவத்தை அடைதலுங் கூடும். அப்பொழுது அவன் சிவப்பொருளை உலகில் எங்கும் கலந்து நிற்கும் அபேதத் தன்மையைக் கண்டு உலகப் பொருள்களில் விருப்பு வெறுப்பு இல்லாதவனுய் அப்பொருளோடு இரண்டறக் கலந்து சிவத் தோற்றம் ஒன்றையே கண்டுகொண் டிருப்பன்.

தெளிவு ஞானத்தினுல் அவன் ஐயக் காட்சியும் திரிபுக் காட்சியும் முற்றிலுமில்லாத துணிவுஅறிவை (நிச்சயஞானம் அடைகின்ருன்.

(தொடரும்)

செயற்கருஞ்செயல்

வெ. ரா. கந்தசாமியடிகள்,
உடுமலை தமிழ் வித்வான், கர்ணமிர்தம்
சாந்தலிங்கசுவாமிகள் மடம், பேரூர்.

(53-வது பக்கத் தொடர்ச்சி)

இயற்பகையாரின் செயல் கண்டு சுற்றத்தவர் யாவரும் கூடி ஏ? இவன் பித்தன் யார் இது செய்வர்; பரதேசியாக வந்த ஒருவனுக்கு மனைவியைத் தருதல் என்ன நீதி; இது அநீதி. குலக்கேடான செயல். அவன் மூடன். தகாத காரியம் செய்தானாயினும் நாம் விடலாகாது. என்று ஒருங்கு திரண்டு வருவாராயினர்.

இறைவன் அஞ்சினார் போலப் பார்க்க உடன் வந்த பெண் மணி பெருமானே! அஞ்சற்க; உமது அருத்தொண்டர் அவர் களையெல்லாம் வென்று தேவரீர் பயமின்றிப் போம்படிச் செய் வார். என்ற அளவில் வந்த சுற்றத்தவர்களெல்லாம் சுற்றி வளைத்துக்கொண்டு அடா, குலக்கேடா! மனைவியை பரதேசிக் குக் கொடுத்தது மல்லாமல், நீ வீரனைப்போல் எங்களை வெருட் டவும் வந்தாயா? உன்னுடைய அறிவே அறிவு. நீ வெகுளினும் நமது குலப் பெண்ணை அயலான் கொண்டுபோக விடோம். உயிரை விட்டாவது மானங் காப்போம். என்று தடுக்க, இயற் பகையார் சிங்கவேறு யானைக் கூட்டத்திற் பாய்ந்ததுபோற் பாய்ந்து, யாவரையும் கொன்று வீழ்த்தி பெருமானே, அஞ்சாது போகவென வணங்கிப் பின் சென்றார். இறைவன் பெண்மணி யோடு பல இன்மொழி பயின்று காதல்காட்டிச் செல்கின்றார். இயற்பகையார் திருச்சாய்க்காடு வரை சென்று சிறிதும சஞ்சல மின்றி வழியனுப்பி வணங்கித் திரும்புகிறார். இறைவன் பொய் யுள மகன்ற புனிதன் சிறிதும் மன வேறுபாடின்றி முன்னை யினும் சிறந்த மகிழ்வுடன் செல்வதைப் பார்த்து,

"இயற்பகை முனிவாவோல மீண்டுநீ வருவாயோல
மயற்பிலா தானேயோல மன்பனே யோலமோலம்
செயற்கரும் செய்கைசெய்த தீரனே யோலமென்ருன்
மயக்கறு மறையோலிட்டு மாலயன் தேடநின்ருன்."

அந்த ஓலமொழி கேட்டு இயற்பகையார் மனம் துடித்து ஓடி வருகிறார். இன்னும். தடை செய்வார் உளரோ யாரேனும், அவர்களை எனது வாளால் வீட்டி, பெருமானை அச்சமிலாது

போகச் செய்வேன் என்று வருகிறார் இவண். தனது அன்பர்களை எம பயமின்றிக் காத்துப் பிறவப்பிணி தீர்த்து ஆட்கொள்ளும் இறைவனை அச்சம் தீர்ப்பேனென்று ஒரு அடியவர் வருவது வியப்பல்லவா? இயற்பகையார் வருகிறார். இறைவன் மறைந்து காட்சி தருகிறார். அடியவராக வந்தவர்க்கு அடியராம் தொண்டர் வணங்கி நிற்கிறார். இனி இதுபற்றிச் சிறிது ஆராய்வாம்.

மிகுந்த தியாகபுத்தி யுள்ளாரும் வந்து கேட்போருக்கு எப்பொருளையும் தப்பாமல் கொடுப்பார். மனைவியைக் கொடுவென்றால் அந்த சொல்லுத் தாங்காது தக்க தண்டம் கேட்டோருக்கு விதிப்பார். இது உலகியல். இயற்பகையார் மனைவியை மகிழ்வுடன் கொடுத்தார் என்பது பொருந்துமா? உலகியலில் பொருந்தாததுதான்; பெரியபுராணத்தில் கண்ட அடியார் செயல் யாதும் உலகியலில் அடங்கியனவல்ல. உலகத்திற்கப்பாற்பட்டதாகும் என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். கண்ணப்பர் செயலும், சிறுத்தொண்டர் செயலும் அது போன்றதேயாம். உலகியலாவது எம்மக்களும் தமக்குரிய மண், மனை, மனைவி மைந்தர்களாகிய யாவையும் தமதென்றே கொள்வர். அடியவர் செயல் அதுவன்று.

> **"பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்து மண்மேல்**
> **இறக்கும் பொழுது கொடு போவதில்லை இடைவழியே**
> **குறிக்கும் செல்வம் சிவன் தந்ததென்று கொள்வர்"**

அதுவல்லாமலும்; உடல், பொருள், ஆவி ஆதிய யாவும் சிவனுடையது, நாம் அவனுடைய உடமைப் பொருள் என்றே பற்றின்றி நிற்பர். அந்த நிலையில் நின்ற அடியவர் செயலை நமது சிற்றறிவு கொண்டு ஆராய்வது அடிக்கோல் கொண்டு ஆகாயத்தை அளவிட்டது போலாம். இஃது ஒருவாறிருக்க, இறைவன் அடியவர்பால் அடியவர் போன்று வந்து மனைவியைக் கொடுவென்று கேட்டல் நீதியாகுமா? ஆகும். எவ்வாறெனில், கூறுதும்: இயற்பகையார் மனைவியுடன் வாழ்ந்தும் மற்ற பற்றின்றி வாழ்ந்தார். ஆயினும், மனைவியின்பால் உள்ள பற்றினையும் அறவே ஒழித்தே இறைவன் ஆட்கொண்டான் என்று உணர்தல் வேண்டும். புறப் பற்றின்றி இயற்பகையார் வாழ்ந்தார் என்பது. அவர் அடியவர்க்கு யாது கேட்பினும் தாழ்ச்சியின்றிக் கொடுத்து வந்ததால் விளங்கும்-

இந்த நிலையில், ஆண்டவன் நிலையைப் பரிசிலனை செய்தல் தகுதியன்றென்பது,

"ஆட்பா லவர்க்கருள் செய்யும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை கிளக்கல் வேண்டாம்"

என்று சம்பந்தப்பெருமான் கட்டளையை ஏற்று அமைதிபெறல் தகுதியாம். இனி இறைவன் காட்சி கண்டு,

"சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையி லின்ப வெள்ள மெனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்துள் ளாடும் சேவடி போற்றி யென்ன"

இறைவன் இருவருக்கும் சாரூபம் தந்து சிவலோகத்தில் என்றும் இருக்கும் பதம் தருகிறார். இருவரும் நித்திய வின்ப நிலைமை பெற்று அழியாத முத்திநிலை யடைந்துளார். சுபம்.

கொல்லாமை

பண்டித. சித. நாராயணசாமி, திருவையாறு.

(முன் தொடர்ச்சி)

உலோ.— அவ்வாறு கனவின்கண்ணே இவ்விடத்தில் காணுதனவற்றைக் கண்டேமாயினும், கண்ட அறிவு இந்த வுடம்பின் குணமாகுமன்றி வேறுடம்பின் குணமாகாது ஆதலின், ஒருடம்பின் குணம் மற்றோருடம்பிற் சென்று புகும் என்பது பொருந்தாது. புகுவதுண்டெனில், ஒரு மணியினொளி மற்றொரு மணியிற் சென்று பொருந்துதல் வேண்டும். அப்படிப் பொருந்துவதில்லாமையால் இவ்வுடம்பின்குணம் இவ்வுடம்பின் முடிவில் வேறோருடம்பிற் சென்று புதுவது மில்லையன்றோ?

சை. சி. ஆ.— ஒன்றின் குணம் மற்றொன்றிற் சென்று புகாதென்பது பொருந்தும். சொல்லிய அறிவு இவ்வுடம்பின் குணமன்று; பின்னரோ இவ்வுடம்பில் வினைக்கிடாகப் புகுந் துள்ள ஆன்மாவின் குணமாகுமென் றறிக.

உலோ.— நீவிர் இவ்வுடம்பின்கண் உடம்பிற்கு வேருக ஓரான்மா வுண்டென்பதாகக் குறிப்பிடுகின்றீர்; அது பொருந் தாது. ஏனெனில், இங்கே காணப்படுகின்ற நிலம், நீர், வளி (வாயு) என்னு மிந்த நான்கு பூதங்களும் அழியாதனவாக

வுள்ளன. அவற்றுள் வளி (வாயு) என்பது அசையுந் தன்மை யுடையது. ஆகையால் மற்றைய நிலம், நீர், தீயாகிய பூதங்கட்கதனோடு கலப்புண்டாகும். அவ்வாறு கலப்புண்டாதலினால் இந்த வுடம்பு முதலிய பொருள்களுண்டாகின்றன. அவற்றின் கலப்பால் இவ்வுடம்பு முதலிய பொருள்கள் தோன்றியுள்ளன என்பதை, நிலம் (மண்) திணிந்திருத்தல் போல எலும்பு முதலியன திணிந்திருத்தலாலும், பவ்வி (மலம்) தடித்து விழ்தலாலும், நீர் நெகிழ்ந்திருத்தல் போல குருதி (இரத்தம்) முதலியன நெகிழ்வுடையனவாகக் காணப்படுதலாலும், தீ பொருள்களைச் சுட் டொன்றுவித்தல் போல வயிற்றுத் தீ உண்ட சோறு முதலியவற்றைச் சுட்டொன்றுவித்தலாலும், தோலின் கண் வெப்பங் காணப்படுதலாலும், வளி (வாயு) அசைவுடையதா யிருத்தல்போல இந்த வுடம்பும் ஓடுதல் முதலிய அசைவுடையதாகப் புலப்படுதலாலும், மூக்கு முதலியவற்றில் இயங்குதலாலும் அறியலாம். நில முதலிய நான்கு பூதக் கலப்பால் உடம்பு தோன்றும்பொழுது, வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மூன்றுங் கலந்தபொழுது செவ்வண்ணம் உண்டாவதுபோல உடம்பி லோருணர்வு (அறிவு) தோன்றுதலினாலென்க. உடம்பிற்கு வேருக ஆன்மா வுண்டானால் உடம்பு போலக் கண்கூடாக (பிரத்தியக்ஷமாக)க் காணப்படுதல் வேண்டும். அப்படிக் காணப்படாமையால் உடம்பிற்கு வேருக ஆன்மா வுண்டென்பது ஆகாயத் தாமரைப்பூ, முயற்கோடு, ஆமைமயிர், மணலி லெண்ணெய் இவைகளுண்டென்பதை யொக்கும். ஆகையால் அறிவு முதலியன உடம்பின் குணங்களே யாகும். ஆன்மா என்பது வேறு இல்லை.

சை. சி. ஆ.— அறிவை உடம்பின் குணமென்கின்றனை; அறிவு உடம்பின் குணமாயின் உடம்பு பிணமானபொழுது அறிவு அதன்கண் இருப்பதாகக் காணப்படவில்லையே? உடம்பின் குணமாயின் அதனைவிட் டேன் நீங்கிற்று? உடம்பு கிழே கிடக்கின்றதே, ஆதலால் அறிவு உடம்பின் பண்பன்று; ஆன்மாவின் பண்பே யாகுமென் றறிதல் வேண்டும்.

உலோ.— பிணமான வுடம்பில் வாயு நீங்கியது. அது நீங்கியதால் தீயும் அவிந்துவிட்டது. அப்பொழுது உடம்பில் அறிவு கெட்டது. அறியாமை வந்தடைந்தது. நாசியில் வளி (வாயு இயங்காமையால் வாயு நீங்கிவிட்டதென்பதும் உடலில்

வெப்பங் காணப்படாமையால் தீ அவிந்துவிட்டதென்பதும் புலப்படுகின்றன; ஆகையால் அறிவு உடம்பின் பண்பேயாகும்.

சை. சி. ஆ.— அறிவொளியற் றிருள் பொதிந்த புத்தியினையுடைய உலோகாயத! நீ இவ்வாறு பிணமானபொழுது நீங்குமென்ற வளி (வாயு) உறக்கத்தின்கண்ணே நீங்காதிருக்கவும், தீயும் அவியாதிருக்கவும், உடம்பு, தன் மேலேறி யூர்ந்து செல்லும் பாம்பு முதலியவற்றை யறியாமலும், கள்வன் பகைவன் வருதலை யறியாமலுங் கிடத்தலால் வளி, தீ யிவை நீங்க அறிவு கெடுமென்பது கூடாது. ஆகையால், வினைவயத்தால் அவத்தைகள் தோறும் ஒடுங்கியும் உணர்ந்தும் வருகின்ற ஆன்மா வொருவன் உளன் என்பதையும், அவன் பண்பே அறிவென்பதையும் அறிவாயாக.

(இதுவரை உடம்பே ஆன்மா என்ற உலோகாயதனை சைவசித்தாந்த ஆசிரியர், மறுத்து உடம்பிற்கு வேருக ஒரு ஆன்மா உண்டென்றும், அவன் இம்மையிற் செய்த கொலைப் பாவத்தால் உடம்பின் முடிவில் வேருெரு உடம்பை யடைந்து இன்னாத வுலகத்தில் (நரகத்தில்) துன்பந் துய்ப்பான் என்றும் முடிவு கட்டினர்.

அறம்.

ஐயாறடிகள்,
சித்தபாலைய தேசிகர் ஆதீனப் புலவர், பழநி.

(63 பக்கத் தொடர்ச்சி)

பிற ராக்கம் கண்டு பொருமையுள்ள ஒருவன் தான், ஆக்கமடைந்த பிறரைவிடப் பேராக்கம் உடையவனுக ஆதல் வேண்டுமென்ற பேராசையுடையவ னுகின்றுன். தனது பேராசைப்படி கிட்டாதாயின், வெகுளியுடையவனுய்க் கடுஞ் சொல்லு முடையனுகின்றுன். எனவே நான்கினையும் விலக்கி இயைவதே அறமாகும். அழுக்காறு, அவா, வெகுளி இம் மூன்றும் மனக் குற்றங்கள்; இன்னுச்சொல் சொற்குற்றம்.

அறத்திற்கு ஆவனவெல்லாம் மனத் தூய்மையில் அடங்குமென்று அறிவுறுத்தி, அறத்திற் காகாதனவெல்லாம் "அழுக்கா றவா வெகுளி யின்னுச்சொல்" இந் நான்கனுள் அடங்கும் என்று அருளினர்.

இவ்வமயம் செல்வமில்லாத வறியவரா யிருக்கின்றோ மென்றும், செல்வம் நிறைய உள்ளபோது பார்த்துக்கொள்ள லாம் என்றும் கருதாமல் அறவினையை நினைத்தபோதே செய்தல் வேண்டும். இவ்வுலக வாழ்விற் கின்றியமையாத செல்வம் முதலியன கெடினும் 'அறம்' உற்றுழி நின்று உதவி செய்வதாகும்.

"நாளைச் செய்குவம் அறமெனின் இன்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்
இதுவென வரைந்து வாழ்நா ளுணர்ந்தோர்
முதுநீ ருலகின் முழுவது மில்லை" (சிலப்பதிகாரம்)

நிலையாத உடம்புள்ளபோதே நிலைத்துள்ள அறவினை யினையே செய்தல் வேண்டும். வாழ்நாள் முழுவதும் வீண் நாளாகக் கழியாமல் நாள்தோறும் ஒருவன் அறவினை செய்வா னானல் அவ் வறவினை அவனது பிறவி வழியை அடைக்கும் கல்லாகும். அறத்தான் வரும் இன்பமே இன்பமாகும். அஃ தின்றி வருவனவெல்லாம் அங்ஙனமாகா, புகழுமிலவாம்; அற நெறியினால்தான் புகழினையும் எய்தலாம்.

"அறத்தான் வருவதே யின்பம் மற்றெல்லாம்
புறத்தே புகழு மில"

நமது திருவள்ளுவப் பெருந்தகையார் அறநெறியான் வருவது தான் இன்பம் என்று கூறி, அறத்தான் வராதனவெல்லாம் இன்பத்திற்குப் புறமான துன்பமாம்; புகழுமில என்றும் கூறினர். இதனால் இன்பத்திற் கெதிர்மறையான துன்பம் "புறத்த புகழில" என்பவற்றோடும், புறத்த புகழில என்பவற் றிற்கு எதிர்மறையான, அகத்த புகழுடைய என்பவை இன்பம் என்பதனோடும் கூட்டி யுணரப்படும்.

பொருள்படவே, அறத்தான் வருவனவே இன்பமாம். அகத்தனவாம், புகழுடையனவாம். மற்றையவெல்லாம் துன்ப மாம். புறத்தனவாம். புகழிலவாம்.

அகம் என்பது உள்ளம். உள்ளமென்பது உள்ளது. அஃதாவது உண்மை. அஃதாவது சத்து. அகத்தைப்பற்றிய இன்பம் சத்தான இன்பம். "மனத்துக்கண் மாசில னாத லனைத் தறன்" (குறள் 34) அறமாவது உள்ளநிலை பற்றிய தென முன்னரே அறிவித்தாராகலின், அதுபற்றி வரும் இன்பம் அகவின்பமாதல் சாலும்.

"அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்"

என்னும் குறட்பாவால் எதிர்மறுத் தறியக் கிடப்பன அன்பு, அவாவறுத்தல், பொறையுடைமை, இனியவை கூறல் என்பனவாம்.

"அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையத்
தின்புற்று ரெய்தும் சிறப்பு" —அன்புடைமை.

"இன்ப மிடையரு தீண்டு மவாவென்னும்
துன்பத்துட் டுன்பம் கெடின்" —அவாவறுத்தல்.

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்" —பொறையுடைமை.

"சிறுமையு ணீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையு மின்பந் தரும்" —இனியவை கூறல்.

"ஈதலறம்" என்றபடி அறம் என்பது ஈகைக்கே சிறப்பாக உள்ளது. எனவே, ஈகையால்தான் இன்பமும் புகழும் உளவாம் என்பதை

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்கண வர்"—என்ற குறட்பாவாலும்,

"உரைப்பார் உரைப்பவை எல்லா மிரப்பார்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்') —என்ற குறட்பாவாலும்

திருவள்ளுவப் பெருந்தகையார் அறிவித்தார்.

அறம் பொருள் இன்ப மெனப்பட்ட மும்முதற் பொருள்களில், பொருளும் இன்பமும் அறத்தொடு பொருந்தின் இன்பமாம்; பொருந்தாவிடின் துன்பமேயாம். எனவே, இன்பத்தினை விரும்பும் ஒவ்வொருவரும் செய்யத்தக்கது நல்வினையே. அறம் என்ற செரல் திருவள்ளுவ நாயனுர் அருளிய திருக்குறளையே குறிப்பதாகும்.

"ஒருவன் செய்திகொன்றூர்க் குய்தி யில்லென
றறம்பா டிற்றே யாயிழை கணவ"

(புறநானூறு ஆலத்தூர்க் கிழார்) அறநூல் என்று பாராட்டப் பெற்ற திருக்குறள், அறத்தை இரண்டாய்ப் பிரிக்கின்றது இல்லறம் துறவறமென,

(தொடரும்)

நீதித் துண்டுகள்.

குக சதாசிவ அடிகள்.

1. கல்வி - ஈகை - செல்வம் - புகழ் - வீரம் - செல்வாக்கு ஆகிய இப்பொருள்கள் உண்மை மார்க்கத்தி லொழுகுபவரிடம் இருந்தாற்றான் மேன்மைப்படும். இவைகள் பிறரிடமிருந்தால் கர்வத்தை யுண்டாக்கிப் பொலிவு பெறுது.

2. மறுபிறப்பும், இருவினைப் பயன்களும், கடவுளும் சுவர்க்கம் முதலிய லோகாந்தரங்களும் உண்டு. இவ்வுண்மை யுணர்ந்து தத்துவ ஞானமாகிய நல்வழியி லொழுகி வயது சென்றால் அந்நிலைமையில் அவர் பெரியவர் என்று கொண்டாடத் தகுவர். வெறும் பருவ முதிர்ச்சி ஒன்றையே கொண்டு உண்மை யுணர்வில்லாதவர் பெரியவர் என்று கொண்டாடத் தகார்.

3. வெளிக்குப் பகைமை தோன்றாமல் உள்ளாயிருந்தே கீழறுத்தல் பற்றிய உட்பகைவரது சேர்க்கை பொருளழிவு முதலிய பல தீக்குணங்களை யுண்டாக்கும். அவ் வகைப் பகைவர் அணையாமலும் தாம் அவர்க்கு உடன்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. தமக்குத் தீங்கு செய்த துரியோதனனைத் தேவர் சிறைப்படுத்திக்கொண்டு போனபொழுது தருமபுத்திரர் அவனைச் சிறையினின்றும் விடுவித்தனர். தமக்குத் தீங்கு செய்தவர்க்கும் பெரியோர் நன்மையே செய்வர்.

5. பாஞ்சாலியை இராசசபையி லேற்றி அவமானப் படுத்தியபொழுது அவள் கதறுதலைக் கண்டு பீஷ்மன் முதலியோர் யாது துன்பம் நேரிடுமோவென்று வருந்தினார்கள். அவ்வாறே துரியோதனன் முதலான யாவரும் அழிந்தார்கள். ஆகலின், துன்புற்று ரழுங் கண்ணீரே வலியான் செல்வத்தை யழிக்கு மாயுதமாகும்.

6. மனப் பூர்வமாகச் சொல்லும் இனிய சொற்கள் தருமத்துக்காதாரம். விளைநிலமும், வித்தும், களை பறித்தலும், எரு யிடுதலும், நீர் பாய்ச்சலும், பயிர் செய்தற்கு வேண்டுவன போல, இன்சொல்லும், ஈகையும், வன்சொலின்மையும்,

வாய்மையும், அன்பும் அறஞ்செய்தற்கு வேண்டுவன. இம்மைப் பயனைத் தருகிற உலகத்துப் பயிரினும் மறுமைப் பயனைத் தருகிற அறப்பயிர் மிகவுஞ் சிறப்புடைத்து.

7. சச்சந்தனென்னு மரசன் தன் மனைவியாகிய விசயையி னிடத்து அளவிறந்த காதல் கொண்டான். அவளோடு இடைவிடாது இன்பமுற்றிருக்க வெண்ணினான். நிமித்திகன் முதலிய மந்திரிகள் சொன்ன உறுதிமொழிகளைச் சிறிதுங் கொள்ளாமல் கட்டியங்கார னென்னும் மந்திரியை நம்பினான். அவனிடம் ராஜ்ஜியத்தை ஒப்புவித்து அவனை அரசனாக்கினான். பின் தான் அந்தப்புரத்திற் சென்று மனைவியாகிய விசயையோடு சுகித்திருந்து அக் கட்டியங்காரனாற் கொல்லப்பட்டான். ஆகலின் இன்ப நுகர்ச்சியையே முக்கியமாகக் கொண்டு வேறு எதையும் பொருள்செய்யா திருந்தவன் பிறகு பலவகையால் துன்பமடைவன். முயற்சித் துன்பத்தைத் துன்பமென்று கொள்ளாது விரும்பி யேற்றுக்கொள்பவன் முடிவில் இன்பத்தைத் தவறாதடைவன்.

8. பொய் - புலால்களைக் கடிந்து, எவரையும் இகழ்ந்துரையாமல் நடக்கும் வழிகளைச் செப்பனிட்டு, மனப் பூர்வமான அன்புடனே நல்லுணவைப் பிறர்க்குங் கொடுத்துத் தானும் உண்பவனே புண்ணிய புருஷன். இம் மேலோன் அரசாட்சி பெற்று அன்னதான முதலியன செய்து சுகானுபவமுற்று பலருந் துதிக்க வாழ்வான்.

9. உபகாரஞ் செய்யாமலாவது, அபகாரம் செய்து கொண்டேயாவது உபகாரம் செயபவர்போல வெளிக்குக் காட்டி ஒழுகுபவர் மிகவும் அதமர். இவர்களையே நற்குணங்கள் யாவுமிலாராகிய கரும சண்டாளரென்பர் பெரியோர்.

10. குலம் - செல்வம் - கல்வி முதலியவற்றால் தம்மைத் தாமே பெரியராக மதித்துச் செருக்கிப் பிறரை அலட்சியம் செய்தல் அற்பரது இயல்பாகும். அவ் வியல்புடையாரை அந்த வரம்பு கடந்த நடக்கை காரணமாகப் பழித்தலிற் பயனில்லையென்று அறிவுடையா ரெவரும் பழிக்கமாட்டார்.

மூவெயில் செற்றஞான்று உய்ந்த மூவர்.

(சிதம்பரம் மௌன. சபாபதிச் சுவாமிகள்)

திருச்சிற்றம்பலம்,

மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரில்
இருவர், நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரேன் றேவிய பின்னை
யொருவ நீகரு காடரங் தாக
மான நோக்கியோர் மாநட மகிழ
மணிமுழா முழக்க வருள் செய்த
தேவ, தேவநின் றிருவடி யடைந்தேன்
செழும் பொழிற் றிருப்புன் கூருளானே.

என்னும் இக்கவி சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் பண்-தக்கேசி. திருப்புன்கூர் திருப்பதிகம். எட்டாவது பாடலாகும். இதன்பொருள் வெளிப்படை.

இதில் முதற்கண்ணதாக மூவெயில் என எடுத்துக் கூறியது சூரபன்மனுக்குத் தம்பியாகிய தாரகனுக்குப் பிறந்த தாரகாக்கன், கமலாக்கன், வித்யுன்மாலி என மூவரும் கோடி வருடம் தவம்புரிந்து பிரமதேவர்பால் பொன், வெள்ளி, இரும்புகளாலாகி முறையே சுவர்க்கம், அந்தரம், பூமி என்னுமிடங்களில் நிலைபெற்றிருந்து வேண்டுமிடங்கட்கு உடன்வரவும், அவை ஆயிரம் ஆண்டுகட் கொருமுறை ஒரு முகூர்த்த நேரம் ஒருங்குசேரும் அமயத்து ஒருகணை விடுத்தழிப்பின் அன்றி வேறெவ்விதத்தும் அழிவின்றி நிலைபெறவும், பெற்ற மூவரண்களேயாம்.

அதனைச் சென்ற ஞான்றுயர்ந்த மூவரென்றது இறைவன் அம்மூவரண்களையும் பொடித்த ஞான்று அக்கனலில் வேகாது சிவபத்தியின் முதிர்வால் அழிவின்றியுய்ந்த விரத்தன், மாவிரதன், குணபரன் என்னும் மூவரையாம்.

இதனை

"விரத மாதவந்தரு விரத்தன் மற்றேரு
பரமயோ கன்குண பரனென் றின்னவர்
உரவுமா யையினம துள்புக் காரலர்
அரனடித் தாமரை யயர்த்தி லார்களே

என்னும் உபதேசகாண்டம் திரிபுர விசயச் சருக்கத்து நாரதமுனிவர் திருமாலுக்கு எடுத்துக் கூறும் கூற்றாக அமைந்துள்ள 191-வது கவியாலுணர்க.

இவ்வாறன்றி திரிபுரத்தவுண ரனைவரோடும் அஃதெரிந்த ஞான்றழிந்தவர்களாய தாரகாக்கன், கமலாக்கன், வித்யுன்மாலி என்னும் மூவரையே உய்ந்த மூவராகக் கூறும் கூற்றுக்குப் பிரமாண மின்றென்பதும் அறிக.

சைவத்திரு கயப்பாக்கம் சதாசிவச்செட்டியார் B. A. அவர்கள் தாம் எழுதிய அகத்தியர் தேவாரத்திரட்டு உரையில் இப்பாடற்கு உரை எழுதுமிடத்து தாரகாக்கன், கமலாக்கன், வித்யுன்மாலி என்னுமிவரையே மூவெயில்செற்ற ஞான்றுய்ந்த மூவராகக் குறிப்பிட் டெழுதியிருப்பதும் திருநெல்வேலி மணிவாசக மன்றம் திரு. கா, சுப்பிரமணிய பிள்ளை M. A. M, L. அவர்கள் தாம் எழுதிய திருவாசக உரையில்.

"எண்ணுடை மூவரிராக்கதர்க ளெரிபிழைத்துக்,
கண்ணுத லெந்தை கடைத்தலை முனின்றதற்பின்"

என்னும் திருத்தோணோக்கச் செய்யுளிலும்

"உய்யவல்லா ரொரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே யுந்தீபற........"

என்னும் திருவுந்தியார் செய்யுளிலும் உரையெழுதியவிடத்து இவ்வாறே எழுதியிருப்பதும் ஆதாரமாகாதோ எனின் ஆகாது. என்னை, சைவப்பெரியார் இருவரும் அறியாது கூறுமவரல்லராயினும் இஃது அவர்களால் நுணுகியாய்ந்து கண்டெழுதாது மேனோக்காக எழுதியபோது அவர்களால் அறியப்படாது நேர்ந்த பிழையாமாதலினாலும், இதனைப் பிரமாணமாகக் கொள்ளின் முன்னைப் பிரமாணங்களொடு மாறுபடுமாதலினாலும் ஆகாதென்க. இதனானே மூவெயிற்செற்ற ஞான்றுய்ந்த மூவராவார் விரத்தன், பரமயோகன், குணபரன் என்னும் மூவருமே யாமென்பதும் இவர்களை விடுத்து மற்றவர்களைக் கூறும் கூற்றுப் பொருந்தா தென்பதும் கண்டு கொள்க.

இனி இதன்கண் வரும் "மானை நோக்கியோர் மாநடம்" என்பதுபற்றி அமயம் வாய்ப்புழி எழுதுவாம்.

சபாபதிச் சுவாமி.

மெய்நெறி வெண்பா.

கொளப்பாக்கம், சுவாமி. அருணகிரிநாதர்.

(1953ஞ தொடர்ச்சி.)

20. பகுத்தறிவில்லார் பரமனைக் காணார்.

"கண்முன் பகலிலுருக் காணவிலை யென்றெண்ணி
விண்மீனே யில்லையெனும் வீணன்போல்—மண்ணுலகிர்
ஈசனே இல்லை இருந்தால்முன் காட்டென்னும்
நீசனிறை யையறியா னே."

21. வாசனை யொழிந்தால் ஈசனை யறியலாம்.

"பானுவொளி வீசும் பகலறவே நீங்கிவிடின்
வானுடுக்கள் நன்ருய் வயங்குதல்போல்—வானிறையை
ஊனக்கண் தோற்ற மொழிந்து புலனடங்கின்
ஞானக்கண் கொண்டறிவோம் நாம்."

22. ஆணவ மழியின் அருள்வழி ஈர்த்திடும்.

"ஈசனருட் காந்தம் இதயத் திருந்தான்ம
ஊசி தனைக்கவரா துற்றதேன்—பேசரிய
ஆசையுடன் ஆணவமும் ஆன்மாவை மூடிமிகும்
ஆசுகவிந் துற்றதினு லாம்.

23. பொய்யினை யொழித்தால் ஐயன் அருளுவான்.

"பொம்மைவினை யாட்டைவிட்டுப் போயழுத பிள்ளையினை
அம்மையகங் கொண்டா தரிப்பதுபோல்—இம்மை
தருமின்பம் நாடாமற் சங்கரனுந் தன்பால்
வருமன்பர்க் கேயருளு வான்."

(தொடரும்)

திருவாரூர்,

அநபாயன் ஆஸ்திக சங்க

திருவாசக விழா.

இவ் விழா நாளது விஜய ஆண்டு மார்கழித் திங்கள் 6-ம் நாள் சோமவாரம் திருவாதிரைத் திருநாளன்று, திருவாரூர், ஸ்ரீ தியாகராஜப் பெருமானது தேவாலய தேவாசிரிய மண்டபத்தே காலை மாலை இரு வேளையும் நடைபெற்றது. காலையில் திருவாரூர், கழக உயர்நிலைப் பள்ளித் துணையாசிரியர் S.R. வெங்கிட்டராமையர், B.A., L.T. அவர்கள் தலைமையிலும், மாலையில் தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கத் தலைவர், குக சதாசிவ அடிகள் தலைமையிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருவாரூர், இராஜாங கட்டளை ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் திறந்து வைத்து திறப்புரையாற்றிய பின்னர்; சிவ புராணம், திருச்சதகம், திருவெம்பாவை, திருப்பள்ளி யெழுச்சி, அடைக்கலப்பத்து, கண்டப்பத்து, பிடித்தப் பத்து, ஆனந்தமாலை. அச்சோப்பதிகம் பற்றி— முறையே S. சுவர்ண தியாகராஜ தேசிகர், க. பழனியாண்டிப்பிள்ளை, M. நாராயணசாமி ஐயர், M. இரத்தின தேசிகர், சாது சுப்பையா, க. குஞ்சப்ப சாது, A. இராஜகோபால பிள்ளை, வித்துவான். K. மீனுட்சிசுந்தரம் பிள்ளை, முதலியோர் சொற்பொழிவு நிகழ்த்தினுர்கள். வழக்கறிஞர், க. ஷண்முகம் பிள்ளை, B. A. நன்றி கூறினுர்கள். இரவு 8-மணிக்கு செயலாளர்; ச. க. தியாகராஜ பிள்ளை கடவுள் வாழ்த்துக் கூற சங்க விழா இனிது நிறைவேறியது.

Printed By: Rm. Natarajan Chettiar at [illegible] Press, Chidambaram,
Edited and Published by, Swami Gnanananda "Chinnamadam" Erumbur